padippakam

# ලංකාවේ ශිෂ්‍ය ව්‍යාපාරයට එරෙහි රාජ්‍ය මර්දනය

# இலங்கை மாணவர் அமைப்பிற்கு எதிரான அரச அடக்குமுறை

# State Suppression Against Students Movement of Sri Lanka

## වසර හතරක සිදුවීම් වාර්තාව

## நான்கு வருட சம்பவங்களின் அறிக்கை

## Reporting the Incidence of Four Years




මානව හිමිකම් සුරැකීමේ ශිෂ්‍ය සංවිධානය
மனித உரிமைகளை பாதுகாக்கும் மாணவர் அமைப்பு
Students for Human Rights

අන්තර් විශ්වවිද්‍යාලයීය ශිෂ්‍ය බලමණ්ඩලය
அனைத்து பல்கலைக்கழக மாணவர் பேரவை
Inter University Students' Federation


படிப்பகம்

# உள்ளடக்கம்

முன்னுரை

2010-2014 இனுள் இடம்பெற்ற மாணவர் அடக்குமுறை

| | |
|---|---|
| சபரகமுவ பல்கலைக்கழகம் | 10 |
| பேராதெனிய பல்கலைக்கழகம் | 18 |
| ரஜரட்டை பல்கலைக்கழகம் | 22 |
| களனி பல்கலைக்கழகம் | 28 |
| இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 32 |
| யாழ் பல்கலைக்கழகம் | 34 |
| சாரிபுத்ர பிக்கு பல்கலைக்கழகம் | 36 |
| பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | 36 |
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 36 |
| சட்டப் பல்கலைக்கழகம் | 36 |
| ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 38 |
| ருஹுணு பல்கலைக்கழகம் | 46 |
| கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் | 49 |

அடக்குமுறையுடன் தொடர்புடைய விசேட நிகழ்வுகள்

ஜானக மற்றும் சிசித ஆகிய மாணவர்களை கொலை செய்தமை 52

ருஹுணு பல்கலைக்கழக பிரதான மாணவர் சங்க ஹர்ஷ குணவர்தனவினை கடத்த முயற்சித்தமை மற்றும் தாக்கியமை 54

பேராதனை பல்கலைக்கழக பிரதான மாணவர் சங்க தலைவர் ஜனக நிலங்க மதுஷன் கடத்திச்சென்று அச்சுறுத்தியமை 55

களனி பல்கலைக்கழக பிரதான மாணவர் சங்க தலைவர் சுரஞ்ஜித் பண்டாரவை தாக்கியமை 56

அனைத்து பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் கிம்புல்லாவே சந்த்ரானந்த தேரரிற்கு எதிரான அடக்குமுறை 57

களனி பல்கலைக்கழக பிரதான மாணவர் சங்க செயலாளர் சியாமலி லியானாராச்சிக்கு எதிரான அடக்குமுறை 59

ரஜரட்டை பல்கலைக்கழக பிரதான மாணவர் சங்க தலைவர் இசுறு பண்டாரவிற்கு எதிரான அடக்குமுறை 60

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சஞ்ஜீவ பண்டாரவிற்கு எதிரான அடக்குமுறை 61

கல்வி நிலையங்களை இராணுவமயப்படுத்துவதன் மூலம் நிகழ்த்தும் அடக்குமுறை 64

முடிவுரை 66

இணைப்புக்கள் 67

## முன்னுரை

ஜனநாகயம் பல்வீனமடைதல், மனித உரிமைகள் மீறப்படடுதல் காரணமாக இலங்கை சம்பந்தமாக சர்வதேசிய அமைப்புகளினதும், பல்வேறு நாடுகளினதும் கவனம் திரும்பியுள்ளது. அதற்காகவே இலங்கை அரசாங்கம் ஒரு பக்கம் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறியும், மறுபுறம் சர்வதேச ரீதியில் ஏற்படப்போகும் ஆபத்து காரணமாக இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக பொய்யான அறிக்கைகளை தயாரிக்கும் கைங்கரியத்திலும் ஈடுபட்டிருக்கிறது. மனித உரிமை சம்பந்தமான பிரச்சினைகளை மையமாகக் கொண்டு வெளிநாட்டு அரசாங்கங்களால் இலங்கை அரசாங்கம் கேள்விக்குள்ளாக்கப்படும் ஒவ்வொரு தருணத்திலும் அதனை வெளிநாட்டு தலையீடென தூக்கிப் பிடித்து, இலங்கை மக்களின் ஆதரவை அரசாங்கத்தின் பக்கம் திருப்பிக் கொள்வதற்காக பல்வேறு கருத்துக்களை வழங்குகிறது. ஒருபுறம் அடக்குமுறையின் ஊடாக பல்வேறு அரசியல் செயற்பாட்டாளர்களையும், தொழிலாளர்களையும் இலக்காகக் கொண்டு நடத்தப்படும் அடக்குமுறைகளை தொடர்வதிலும, அதன்மூலம், ஏற்படக்கூடிய வெளிநாட்டு அழுத்தங்களை அடிப்படையாகக் கொண்டு பொது மக்களின் ஒத்துழைப்பையும் நன்மதிப்பையும் அரசாங்கத்தின் பக்கம் திருப்பிக் கொள்ளும் வஞ்சக விளைாட்டிலும் ஆட்சியாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். நாட்டின் சிங்கள பெரும்பான்மை பௌத்த மக்களுக்குள் புகுத்தப்பட்டுள்ள கருத்துக்களை நிலையாக வைத்துக் கொள்வதும் ஆட்சியாளர்களின் சூழ்சியாக இருக்கிறது. அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் நபர்களுக்கு எல்.டீ.டீ.ஈ லேபல் ஒட்டுவதையும், சர்வதேச சதிகாரர்கள் என பட்டம் சூட்டுவதையும் ஒரு பாஷனாக அரச ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் கடந்த மூன்று வருடங்களில் மேற்கொண்ட பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளின்போது அவர்களுக்கு எதிராக இப்படியான குற்றச்சாட்டுக்களே தொடுக்கப்பட்டன. பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு எதிராகவும் இந்த கருத்து பயன்படுத்ததப்படுகிறது

இந்த அனைத்தையும் பயன்படுத்தி கடந்த சில வருடங்களாக இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கும், ஜனநாயகத்தை பலவீனப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தெரிய வந்தன. ஊடகவியலாளர்களை கடத்துதல், ஊடக நிறுவனங்களை கொளுத்துதல், அரசியல் செயற்பாட்டாளர்களை கடத்துதல், தமிழ் மக்களை இலக்காகக் கொண்டு கடத்தல்களை மேற்கொண்டமை. ஆர்ப்பாட்டங்களின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தமை, மனிதர்களை கொலை செய்தமை, பொலிஸ் பாதுகாப்பில் இருந்த சந்தேக நபர்களை தாக்கியமை அல்லது சுட்டுக் கொலை செய்தல் போன்ற பல சம்பவங்கள் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

பல்கலைக் கழகத்தை சார்ந்தவர்கள் விடயத்தில் நடந்துக் கொண்ட முறை மனித உரிமைகள் மீறப்பட்டதற்கான வெளிப்பாடாகும். விஷேடமாக பல்கலைக் கழக மாணவர்களுக்கு எதிராக ஆட்சியாளர்கள் கடைபிடித்த உபாயங்களாக இருந்தவை சட்டமும், சட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்களையும் பயன்படுத்தி அடக்குமுறை, ஆர்ப்பாட்டங்களின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், தலைவர்களை இலக்காக வைத்து மேற்கொள்ளப்படும் அடக்குமுறை ஆகியனவாகும். கடந்த வருடத்தில் மட்டும் 1420 மாணவத்தன்மையை இரத்துச் செய்தமை உட்பட வகுப்புத்தடைகளும் தெரியவந்துள்ளன. 231 கைதுகளும் மற்றும் 164 வழக்குகளும் தொடுக்கப்பட்டுள்ளன. 1990க்குப் பின்னர் மாணவர் அமைப்பிற்கு

எதிராக அடக்குமுறை உச்சக்கட்டத்தையடைந்த நான்கு வருடங்கள் என்பது கடந்த நான்கு வருடங்களுமாகும். மூன்று பல்கலைக் கழக மாணவர்கள் கொல்லப்பட்டனர். சுசந்த பண்டார, ஜானக ஏகநாயக மற்றும் சிசித பிரயங்கர ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். இந்த மூன்று சம்பவங்களின் போதும் ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டு பொய்ப்பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், குற்றத்தை மூடி மறைப்பதற்கும், நீதிமன்ற செயற்பாடுகளை காலம் தாழ்த்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ருஹுணு பல்கலைக் கழகத்தின் முன்னால் தலைவர் ஹர்ஷ குணவர்தன இலக்கமில்லாத வாகனத்தில கடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. யுாழ் பல்கலைக் கழக மாணவர் சிறிதர் இவ்வாறு கடத்தப்பட்டு கடுமையாக தாக்கப்பட்ட பாதையோரத்தில் போடப்பட்டிருந்தார். கடந்த மூன்று வருட காலத்தில் மூன்றுமுறை கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் சஞ்சீவ பண்டாரவை மீண்டும் சிறையிடைக்க முயற்சிகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமை குறித்து விவரமான அறிக்கை இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு வருட காலத்திற்குள் மாணவர் அமைப்பிற்கு எதிராக செயற்பட்ட அடக்குமுறை குறித்து ஆதாரங்களுடன் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக அரச அடக்குமுறை மாணவர்களுக்கு எதிராக செயற்படுவதற்கான காரணம் இலங்கையின் உயர் கல்வியை தனியாமர்மயப்படுத்துவதற்கு எதிராகவும், பாடசாலைகஷ கல்வியை தனியார்மயப்படுத்தும் ஆட்சியாளர்தகளின் தேவைக்கு எதிராக மாணவர்கள் செயற்பட்டமையுமேயாகும்.

இலங்கைகுள் செயற்படும் நவ தாராளமய முதலாளித்துவ பொருளாதார சீரமைப்பின் மூலம் துன்பத்துக்குள்ளாகும் மக்களின் போராட்டங்களை அடக்குதும், மக்களை இனரீதியாக பிரிப்பதும் காரணமாக தோன்றக்கூடிய இனவாத செயற்பாடுகள் பாரதூரமான மனித உரிமை மீறப்படுதல் மற்றும் ஜனநாயகத்தை பலவீனப்படுத்தும் நிலைமை உருவாகியிருக்கிறது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறல் சம்பந்தமாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளினால் எழுப்பப்படும் குரல் வெளிநாட்டு அழுத்தங்களாக குறிப்பிட்டு தொடர்ந்தும் மக்கள் ஆதரவை பெற்றுக் கொள்ளும் அரசியல் விளையாட்டில் ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அதேபோன்று இது விடயத்தில் தலையீடு செய்யும் சில நிறுவனங்கள் மற்றும் நாடுகளின் உள்நோக்கம் காரணமாகவும் ஆட்சியாளர்களுக்கு நண்மையளிக்கும் நிலை உருவாகியிருக்கிறது. பொருளாதார செயற்பாட்டில் முற்றாக ஏகாதிபத்திய சார்ப்பில் செயற்படும் ஆட்சியாளர்களுக்கு அரசியல் தலத்தில் பொய்யான ஏகாதிபத்திய எதிர்ப்பை காட்டும் சந்தர்ப்பங்களும், அதன்மூலம் வெளிநாட்டு வியாபாரிகள் சார்ந்த நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் மேலும் உக்கிரமடையக் கூடும். இதற்காக மனித உரிமைகளை மதிக்கும், ஜனநாயத்தை மதிக்கும் நபர்களினதும், செயற்பாட்டாளமர்களினதும் அமைப்புகளினதும் கூர்மையான தலையீடு அவசியமாக இருக்கிறது. மக்களை அடக்கும், மக்களை ஏமாற்றும் தற்போதைய ஆட்சியை வெளிப்படுத்துவதற்காக இந்த அறிக்கை பயன்படுமென நினைக்கிறோம்.

| பல்கலைக்கழகம் | மாணவர் அந்தஸ்தை ரத்து செய்தல் மற்றும் வகுப்புத்தடை செய்தல் | வழக்கு தொடர்தல் | | சிறையில் அடைத்தமை | கொலையாளிகளால் தாக்கப்பட்டமை | | மரண எச்சரிக்கை | | கொலை | கடத்தல் சம்பவம் | மாணவர் சங்க நீக்கம் செய்தல் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வழக்கு எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | | நிகழ்வுகள் | மாணவர் எண்ணிக்கை | நிகழ்வுகள் | மாணவர் எண்ணிக்கை | | | மாணவர் சங்க எண்ணிக்கை | நிகழ்வுகள் |
| சபரகமுவ | 141 | 02 | 16 | 05 | 3 | 14 | 49 | 61 | - | 1 | 05 | 02 |
| களனி | 87 | 7 | 48 | 5 | 34 | 47 | 25 | 76 | 1 | - | | |
| ருஹுணு | 60 | 13 | 63 | 09 | 10 | 10 | 16 | 45 | 2 | - | 2 | 2 |
| ஜயவர்தனபுர | 391 | 127 | 85 | 8 | 08 | 16 | | | | - | 02 | 02 |
| பேராதனை | 223 | 7 | 39 | 21 | 5 | 8 | 35 | 24 | - | 1 | 08 | 1 |
| கட்புல ஆற்றுகைக் கலைகள் | 18 | - | - | - | - | - | - | - | - | - | 4 | 1 |
| ரஜரட்டை | 71 | 4 | 41 | 13 | 6 | 16 | 5 | 12 | - | 1 | 1 | 1 |
| தென்கிழக்கு | 53 | 1 | 53 | - | - | - | - | - | - | - | - | - |
| யாழ் | - | 1 | 13 | 13 | 11 | 68 | - | - | - | - | - | - |
| பௌத்த மற்றும் பாளி | 197 | 2 | 68 | - | - | - | - | - | - | - | 3 | 1 |
| புத்த ஶ்ராவக | 48 | - | - | - | - | - | - | - | - | - | 1 | 1 |
| திறந்த பல்கலைக்கழகம் | 05 | | | | | | | | | - | 05 | 1 |
| ஊவா வெல்லஸ்ஸ | 12 | - | - | - | - | - | - | - | - | - | 5 | - |
| சாரிபுத்ர பிக்கு | 54 | - | - | - | - | - | - | - | - | - | - | 1 |
| மொத்தம் | 1360 | 164 | 426 | 74 | 77 | 179 | 130 | 218 | 3 | 3 | 36 | 13 |

இந்த அட்டவணையில் அடங்கியுள்ள தரவுகள், எம்மால் சேகரிக்கப்பட முடிந்தவை மட்டுமே ஆகும்.

# சபரகமுவ பல்கலைக்கழகம்

| விளக்கம் | | எண்ணிக்கை |
|---|---|---|
| வகுப்புத்தடை செய்தல் மற்றும் மாணவர் அந்தஸ்தை ரத்து செய்தல் | | 141 |
| வழக்கு தொடர்தல் | வழக்கு எண்ணிக்கை | 02 |
| | மாணவர் எண்ணிக்கை | 16 |
| சிறையில் அடைத்தமை | | 05 |
| கடத்தல் சம்பவம் | | 01 |
| கொலையாளிகளால் தாக்குதல் | நிகழ்வுகள் | 03 |
| | மாணவர் எண்ணிக்கை | 14 |
| கொலை மிரட்டல் | நிகழ்வுகள் | 49 |
| | மாணவர் எண்ணிக்கை | 61 |
| மாணவர் சங்க நீக்கம் செய்தல் | மாணவர் சங்க எண்ணிக்கை | 05 |
| | மாணவர் எண்ணிக்கை | 02 |



# வகுப்புத்தடை மற்றும் மாணவர் அந்தஸ்தினை இரத்துச் செய்தல்

01. **திகதி** 2011 ஜனவரி 03

**சம்பவம்** 2011 ஜவரி 03ம் திகதி புதிய மாணவர்களுக்கான துண்டுப் பிரசுரம் விநியோகித்தல்

**குற்றச்சாட்டு** பகிடிவதை செய்தமை

**தண்டனை**

| மாணவர் அந்தஸ்தை ரத்து செய்தல்(காலம்) | 2வருடம் 3 மாதம் | 2 வருடம் | 1 வருடம் 6 மாதம் | 1 வருடம் | 9 மாதம் | 6 மாதம் |
|---|---|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 1 | 2 | 1 | 7 | 7 | 40 |

**எடுக்கப்பட்ட நடவடிக்கை**

01. மனித உரிமை ஆணையத்திடம் முறையிட்டமை
02. மேன் முறையீடு செய்தமை

**அடக்குமுறை செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் பட்டியல்**

கே.டீ.ஆர். திசாநாயக
ஆர்.கே.எம். மதுரங்க
டீ.எம்.எம.சீ. திசாநாயக
ஏம். எஸ். எஸ். தென்னகோன்.
பீ.ப.சீ.எல். ஹரிஸ்சந்திர
கே..எஸ் பிரபாத்
எஸ். முரளிகிருஷ்னா
எம்.எம்.என.எஸ். சஞ்சீவ
கே.எம.டி.பி.சி. குமாரிஹாமி
ஜீ.என்.வை. தயாரத்ன
பீ.எம்.எச்.என். ஹேமசந்திர
பீ.எம்.எஸ். பிரியதர்ஷன
ஏ.ஏ.ஜே.சீ. அதாவுத
டப்லிவ்.கே.எஸ் பிரணாந்து
எம்.எஸ்.ஆர்.த.சில்வா
ஆர்.எஸ்.ஏ. ஹேமகாந்த
கே.ஏ.டீ.எஸ். மதுஷாந்த
பீ.எல்.எஸ்.யூ. குமார
டி.ஹென்ஸ்மன்
டி. நிசிகேதன்
எஸ்.பிரதீபன்
என். சொருபன்
எஸ்.எப். குரூ.்.ப்
கே.எஸ். சுாமர
டப்லிவ்.எம்.ஏ.யூ. ஜயலத்
டப்லிவ்.பி.டீ.சீ.ஆர். குமார
ஆர்.ஏ.பி. மதுசங்க
எப்.எம்.எஸ். சங்கபால
எம்.ஜீ.ஐ.என. சரத்சந்திர
டப்லிவ்.ஜீ சுமித்
பீ.கே.எஸ்.எம். விஜயகுணவர்தன
ஜீ.ஏ.டி. தர்மஜீவ
எஸ்.எச்.டீ.தில்ஹானி
கே.ஏ.என். ஜயாஷானி
எச்.டீ. கருனாரத்ன
எச்.சீ.கசுநிகா
டப்லிவ்.டீ.பீ.எம். கீர்திசிங்க
என்.என். கோதாகொட
டப்லிவ்.ஏ.பி. மதுஷானி
டி.எச்.சீ. பிரியதர்ஷனீ
வை.பீ.டி. பிரியங்கனி
டீ.எம்.ஐ. செவ்வந்தி
டீ.கே.வீ.கே. விஜேவிக்ரம
எச்.எம்.எஸ்.பி. ஹேரத்
எஸ்.பீ. அகலவத்த
எச்.கே.எச்.சீ. ஹேமகுமார
ஜே.கே.டீ.டீ. நுவன்
எம்.டீ.கே. வீரரத்ன
ஆர்.எம்.டீ.ஐ. ரத்நாயக
எஸ். ரணவக
எம்.பி.ஏ. நுவன்
ஐ.டீ. மல்வென்ன
ஏ.வீ. டப்லிவ். ஹெட்டிஹேவா
டீ.எம.என்.பீ. திசாநாயக
கே.டீ. தர்ஷன
டீ.எம்.டீ.சீ. விஜேகோன
பீ.ஜீ.எல்.கே. சதுரங்க
டப்லிவ்.ஏ.சீ. மதுஷானி

02. **திகதி** 2013 மார்ச் 15

**சம்பவம்** 2013 மார்ச் 12ம் திகதி பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளல். பல்கலைக் கழக கட்டணங்கள் 500 வீதத்தால் அதிகரிகப்பட்படல். பல்கலைக் கழக சொத்துக்களை ( விளையாட்டுத்திடடடல், நூலகம், நீச்சல் தடாகம், கேட்போமர் கூடம்) விற்றல் ஆகிய கல்வி நலனோம்புகை பிரச்சிணைகள் மற்றும் கல்வியை விற்பதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் சம்பந்தமாக பேசுவதற்காக பல்கலைக் கழகத்திதன் அனைத்து மாணவர்களும் சேர்ந்து பொதுக் கூட்டம் நடத்தியமை.

**குற்றச்சாட்டு** சட்டவிரோதமாக கூட்டத்தை கூட்டியமை, இரவு 8 மணிக்குப் பின்னர் பல்கலைக் கழக வளவில் தங்கியிருந்தமை. அனுமதியில்லாமல் வெளி நபரை கூட்டத்திற்கு அழைத்திருந்தமை. (அப்படி எவரும் வந்திருக்கவில்லை) பல்கலைக் கழகத்தை அவமதித்தல்.

**தண்டனை** 01. மஹா சிஷ்ய சங்கம் உள்ளிட்ட உட்பட அனைத்து மாணவர் சங்கங்களையும் தடை செய்தல்

02. பிரதான மாணவர் சங்கத்தின் அனைத்து அதிகாரிகளினதும் மாணவர் தன்மையை 8 மாதத்திற்கு தடை செய்தல் அமுலுக்கு வந்த நாள் 2013 ஏப்ரல் 9ம் திகதி. (அதுவரை மாணவர்தன்மை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது).

**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

01. மனித உரிமை ஆணையத்திடம் முறையிட்டமை (நியாயமான விசாரணை நடத்தப்படவில்லை).
02. உச்ச நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கு தொடுத்தமை (முதலாவது வழக்கு விசாரணையின்போது, விசாரணைகளுக்கு சமுகமளிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்குப் பின்னர் நடந்த விசாரணைகளின்போது அதற்கான சந்தர்தப்பம் வழங்காமை. வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது).

**அடக்குமுறை செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்கள்**

எஸ்.எச்.எம்.பீ. குணசேகர
எம்.எல்.டீ.டீ.எஸ். குமார
டி.எம.எச.பி. ஏகநாயக
டி.எச்.என். சிந்தக

03. **திகதி** 2013 ஏப்ரல் 01

**சம்பவம்** பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் வெட்டு விழுதல் சம்பந்தமாக விரிவுரையாளர்களை அறிவுறுத்தல் கடிதத்தை பெற்றுக் கொடுத்தல்

**குற்றச்சாட்டு** மாணவர் சங்கங்கள் தடை செய்யப்பட்டுள்ளமையால், கடிதங்கள் பிரசுரங்களை சட்டவிரோதமா விநியோகித்தல் மற்றும் பொய்யான தகவல்களை வெளியாருக்கு வழங்கியமை.

**தண்டனை** 8 மாத வகுப்புத்தடை

**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

மேன்முறையீடு செய்தல்

**அடக்குமுறை செய்யப்பட்ட மாணவரின் பெயர்**

எஸ்.எச்.எம.பீ. சந்தருவன்

padippakam

04. **திகதி** 2013 ஜுன் 04

**சம்பவம்** சட்டவிரோதமாக தடை செய்யப்பட்ட மாணவர் சங்கங்களை மீண்டும் செற்றுக் கொள்ளல்., மாணவர் தன்மை பறிக்கப்பட்ட மாணவர்தகளின் மாணவமர்தன்மையை மீளப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் பல்கலைக் கழக வளாகத்திற்குள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடல்.

**குற்றச்சாட்டு** சத்தியாக்கிரகம் காரணமாக உப வேந்தரால் தனது கடமையை அச்சமின்றியும், சந்தேகமின்றியும் செய்ய முடியாமை. அரசாங்கம் பெயரிட்ட குடியரசு தினத்தை நடத்த முடியாமை, நிர்வாக சபை வழங்கிய ஒழுக்காற்றுத் தீர்ப்பை இரத்துச் செய்ய வலியுறுத்தியமை, ஒலிபெருக்கி பாவித்தமை மற்றும் மேற்படி காரணிகளில் ஒன்றில் அல்லது சிலவற்றில் சம்பந்தப்பட்டமை.

**தண்டனை**

| மாணவர் அந்தஸ்தை ரத்து செய்தல்(காலம்) | 1 வருடம் 6 மாதம் | 9 மாதம் | 7 மாதம் | 5 மாதம் |
|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 13 | 12 | 01 | 08 |

**எடுக்கப்ட்ட நடவடிக்கைகள்**

01.மனித உரிமை ஆணையத்தில் முறையிட்டமை(நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை)
02.மேன்முறையீடு செய்தமை.

**அடக்குமுறை செய்யப்பட்ட மாணவர்கள்**

டப்லிவ்.பி.எஸ்.சீ. ஹபன்கல
மே.எம். பிரியதர்ஷன
எஸ்.என்.டப்லிவ்.பீ.எம். செனவிரத்ன
டீ.வி.எச்.ஏ.கே. தொடங்கொட
ஜே.எம்.ஜே.பி. ஜயசுந்தர
டி.எம.டி.டபலிவ். நிமலவன்ச
யு.ஜ.ஹினடிகல
எஸ்.வி. கொடிதுவக்கு
டீ.கே.சீ.ஏ. திசாநாயக
கே.பி.ஏ.டி. பிரசாத்
ஜே.டீ. விஜேசிங்க
ஆர்.எம்.ஆர். பி.கே. ரத்நாயக
எச்.எம்.எல்.டி.எஸ். பண்டார
ஐ.பி.பீ. மதுஜித்
ஆர்.ஏ.கே.எஸ். சதுரங்க
ஏம்.ஜீ.டீ.சி. பண்டார
எம்.என்.எம்.என். நிரோஷன்
கே.சீ.ஆர். பெரேரா
பி.ஏ.எஸ்எம். சிரிமெவன்
ஏ.கே.எஸ். சஞ்சீவ
கே.எஸ்.டீ.பி. குமார
என்.ஆர். ஓபநாயக
ஏ.எஸ். பிரியதர்ஷனி
எம்.எல்.சீ.எம். கருணாரத்ன
எஸ்.எம்.எல். பிரபாத்
எ.எம்.ஏ.டீ.சி. குமார
என். முத்துமால
எஸ்.எம்.என்.ஜே. மாபா
வி.ஜீ.பி. தேசப்பிரிய
ஏ.எல்.ஜீ.என். புத்திக
ஜே.எஸ். மெதகம
டீ.எம்.என்.பீ. திசாநாயக
கே.ஏ.சீ.பி. பிரியங்கர
ஆர்.எம்.எஸ்.பி. ரத்நாயக
டப்லிவ்.எம்.எஸ்.ஆர். பண்டார
ஆர்.டி. ஜயசிங்க
எஸ்.பி. லியனகே
டப்லிவ்.எச்.ஆர்.ஐ.. உதயன்தி
ஜே.எம.டீ.எம். நிராஜ்
பி.என்.எல். பின்னவல
டப்.கே.டீ.பீ.எச். பர்னாண்டஸ்
எஸ். மோரவக
பி.பி.சி.ஜே. ரணசிங்க
பி.ஏ.எஸ்.பி. குமாரி



படிப்பகம்

padippakam

05. **திகதி** 2013 ஆகஸ்ட் 01

**சம்பவம்** 2013 ஆகஸ்ட 01ம் திகதி பெண்கள் விடுதிகளில் அடிக்கடி நடந்த பல்வேறு நபர்தகளின் திடீர் நுழைவு காரணமாக பாதுகாப்பற்ற நிலைமை உருவாகியமையால், பாதுகாப்பை உறுதி செய்யுமாறு மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியமை, மற்றும் அவ்விடத்திற்கு வந்த நிர்வாக அதிகாரிகளுக்கு எதிர்ப்பு காட்டியமை.

**குற்றச்சாட்டு** விரிவுரையாளர்தகளுக்கு (இவர்கள் பல்கலைக் கழகத்தின் நிர்வாக அதிகாரிகளாகும்). உடல், மன ரீதியாக துன்புறுத்தியமை. புகிரங்கமாக அவமானப்படுத்தியமை மற்றும் மரண பயத்தை ஏற்படுத்தியமை. (இந்த நபர்கள் கூட மரண அச்சுறுத்தலையும், தாக்கப்பட்டமையையும் நிராகரிக்கின்றனர்)

**தண்டனை** 16 மாணவர்களின் மாணவர் தன்மையை ஆயுட்காலத்திற்கும் தடை செய்தமை மற்றும் சமனலவெவ பொலிஸாரினால் 18 மாணவர்களுக்கு எதிராக வழக்கு தொடுத்தமை.

**எடுக்கப்ட்ட நடவடிக்கைகள்**

01. மனித உரிமை ஆணையத்தில் முறையிட்டமை
02. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தமை (இந்த வழக்கு தொடர்ந்து நடைபெறுகிறது)
03. மேன்முறையீடு செய்தமை மேற்படி நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பின்னர் மாணவர்தன்மைக்கு விதிக்கப்ட்ட தடைக்குப் பதிலாக குற்றச்சாட்டை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| மாணவர் அந்தஸ்தை ரத்து செய்தல்(காலம்) | 4 மாதம் | 9 மாதம் | 12 வருடங்கள் | 02 வருடங்கள் |
|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 07 | 01 | 05 | 03 |

**அடக்குமுறைக்கு உள்ளான மாணவர்களின் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| எஸ்.ஏ.எஸ். லஹிரு | ஆர்.எம்.எஸ்.எஸ். சேனவிரத்ன | பி.எஸ்.கே. விஜேசிரிவர்தன |
| எஸ். சேனாநாயக | எச்.எம்.ஆர்.எச்.கே. ஹேரத் | பீ.டப்.எம்.பி. குமார |
| எல்.டப்..சி. மதுஷான் | நாமல் முனசிங்க | டப்.எம்.எஸ்.எல். திசாநாயக |
| எச்.எம்.டீ.பி.கே. ஹேரத் | பி.எம்.சி.பி. சந்தசேன | |
| பி.எச்.சி.எஸ். மர்மதாச | கே.பி.வி.பி. பிரசாத் | |

06. **திகதி** 2013 அக்டோபர் 10

**சம்பவம்** அப்படி எந்த சம்பவமும் நடக்கவில்லை

**குற்றச்சாட்டு** புதிய மாணவர்களுக்கு பகிடிவதை செய்தமை, பல்கலைக் கழதத்தின் மீதிருந்த நம்பிக்கையை சிதைத்தமை. ஒழுக்காற்று இடைக்கால சாஸனத்தை மீறியமை. பல்கலைக் கழக்கை அவமானப்படுத்தியமை.

**தண்டனை** திகதி குறிப்பிடப்படாது 20 மாணவர்களின் மாணவர் தன்மையை இரத்துச் செய்தமை. பின்னர் ஒழுக்காற்று விசாரணை நடத்தி வகுப்புத் தடை செய்தமை.

**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

01. மேன்முறையீடு வழங்கியமை
02. புதிய மாணவர்கள் அனைவரும் தம்மீத பகிடிவதை மேற்கொள்ளப்படவில்லையென தமது ஒப்பத்துடனான மகஜரொன்றை ஒப்படைத்தமை.

**அடக்குமுறை செய்யப்பட்ட மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| எல்.என்.எஸ்.யூ. விஜேதுங்க | பி.ஆர்.ஏ.எல். இலங்கதிலக | எல்.ஏ.எம்.எச்.எல். ஆரச்சி |
| ஈ.எச்.ஜ.டீ. ஜயரத்ன | எல்.எச்.என். சந்தமாலி | ஆர்.எச்.சி. சந்தருவன் |
| எச்.ஏ.சி. பிரியதர்ஷனி | பி.எல்.எல்.கே. சமந்த | டி.எம்.ஏ.சி. குலதிலக |
| ஏ.எச்.கே.எல். குமார | யு.ஏ.ஏ. நிர்மானி | ஜீ.ஐ. குமார |
| கே.ஆர். ஜயமானி | ஜே.பி.ஐ. குமார | டப்.பி.எம். கயானி |
| ஆர்.ஆர்.டப்.ஜயவர்தன | டப்.பி.எம். கயானி | டப்.டப்.டி.ஏ. சம்பத் |
| ஜீ.எல். பூர்ணிமா | டப்.டப்.டி.ஏ. சம்பத் | |



படிப்பகம்

padippakam

## தாக்குதல். மரண அச்சுறுத்தல் பாதுகாப்புப் பிரிவுகளின் அழுத்தம், கைதுகள் மற்றும் சிறைபடுத்தல்

01. 2013 மே 01ம் திகதி பம்பஹின்ன சந்தியில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் மீதான பாதுகாப்புப் பிரிவினரின் மிருகத்தனமான தாக்குதல்.

01. இந்த தாக்குதலின் காரணமாக சுமார் 150 மாணவர்கள் காயமடைந்தனர்.

02. 100பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதோடு 20 பேர் கடுமையான காயங்களுக்கு உள்ளாயினர்.

03. இந்த ஆர்ப்பாட்டத்தின்போது மாணவர்களுக்கு தண்ணீர் கொடுத்த இரு கிராமத்தவர்களும், கல்விசாரா ஊழியரொருவரும் சிறையிலடைக்கப்பட்டதோடு, 10 மாணவர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டது.

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

| | |
|---|---|
| எச்.எம்.சி.ஐ. ஹெட்டியாரச்சி | பீ.பீ.சி. ஜயசேகர |
| ஜி.ஜெனோத் | தில்சான் தரிந்த |
| எம்.முகுந்தன் | ஏ.என்.ஏ.டீ.சி. குமார |
| பி.வி.பி.எல். சோமதாச | ஆர்.எல்.எம்.யு.கே. ராஜபக்ஷ |

02. 2013 மார்ச் 24ம் திகதி சத்தியாக்கிரகம் நடக்கும் தருவாயில் இலக்கத்தகடு இல்லாத வாகனத்தில் வந்தவர்கள் மேல்நோக்கி சுட்டு அச்சுறுத்திவிட்டு தப்பிச் சென்றனர். இது குறித்து முறைப்பாட்டு இலக்கம் 372/204ன் கீழ் சமனல்வெவ பொலிஸில் முறைப்பாடு செய்தபோதிலும் நியாயமான விசாரணை நடக்கவில்லை.

03. 2012 ஜனவரி 10ம் திகதி விரிவுரையாளர்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தியதாக கைது செய்யப்பட்ட 5 மாணவர்கள் 2013 ஜனவரி 12லிருந்து 17ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். 7 நாட்களை அவர்கள் சிறையில் கழித்தனர்.

.

**சிறையில் அடைக்கப்பட்ட மாணவர்கள்**

| | |
|---|---|
| எம்.என்.எம்.என்.நிரோசன் | சமித் திலின |
| டி.கே.சி.ஏ.திசாநாயக | சந்ரசேன |
| டனுஸ்க ஹேமால் ரணசிங்க | |

04. 2013 ஆகஸ்ட் 07ம் திகதி பி.ப 8 மணிக்கு விவசாய விஞ்ஞான பீடத்தின் முன்னால் தலைவர் எம்.எம்.என்.ஜே.மாபா தங்கியிருந்த இடத்திற்கு வந்த காடையர்கள் தாக்கியமை மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை.

05. 2012 ஜனவரி 10ம் திகதி இரவு 7.00 மணிக்கு எம்.எல்.டீ.டீ.எஸ். குமார உட்பட மூன்று பேர் பல்கலைக் கழகத்திற்குள் வைத்து காடையர்களினால் தாக்கப்பட்டு 2 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமை.



படிப்பகம்

## நீதி மன்றத்தின் ஊடாக நடத்திய அடக்குமுறை

01. 2013 அக்டோபர் 24ம் திகதி நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்திற்கும் நடைபயணத்திற்கும் தடையுத்தரவு பிறப்பித்தமை.

**தடைசெய்யப்பட்ட மாணவர்கள்**

ஆர்.டி. ஜயசிங்க
ஏம்.ஜீ.டீ.சி. பண்டார
கே.பி.என். குணவர்தன
கே.எஸ்.டீ. ரன்கத
அனுராத அபேரத்ன
பி.வி.பி.எல். சோமதாச
ஆர்.கே.எஸ். சஞ்சீவ
என்.எச்.ஏ.ஜே. சேனாரத்ன
இந்துநில் லக்ஷித
எம்.ஐ.யு. த சில்வா
ஏ.பீ.யு.யு. பிரியந்த

## கடத்தல்

01. 2013 செப்டம்பர் 27ம் திகதி புதிய மாணவரொருவரை வேனில் கடத்திச் சென்றமை மற்றும் தகவல்களை பெற்றுத் தருமாறு வற்புறுத்தி அச்சுறுத்தி விடுதலை செய்தமை.

## கொலை மிரட்டல் விடுத்தல்கள்

01. கைத்தொலைபேசி ஊடாக கொலை மிரட்டல் விடுத்தமை. இது குறித்து முறைப்பாட்டு இலக்கம் 359/192ன் கீழ் ஆர்.டி. ஜயசிங்கவினால் முறைப்பாடு செய்யப்பட்டதோடு, நியாயமான விசாரணை நடத்தப்படவில்லை.

| | |
|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 49 |
| நிகழ்வுகள் | 60 |

02. பாதுகாப்புப் பிரிவினர் வீடுகளுக்குச் சென்று அச்சுறுத்தியமை.

| | |
|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 16 |
| நிகழ்வுகள் | 20 |

03. வகுப்புத்தடைக்கு ஆளான மாணவர்கள் தங்கியிருந்த வீடுகளின் உரிமையாளர்கள் அச்சுறுத்தப்பட்டமை. 2013.08.06 அன்று இது குறித்து பம்பஹின்ன பொலிஸில் CIB 54/48 ஆம் இலக்கத்தின் கீழ் முறைப்பாடு செய்துள்ளமை.

# பேராதனை பல்கலைக்கழகம்

| விளக்கம் | | எண்ணிக்கை |
|---|---|---|
| வகுப்புத்தடை செய்தல் மற்றும் மாணவர் அந்தஸ்தை ரத்து செய்தல் | | 223 |
| வழக்கு தொடர்தல் | வழக்கு எண்ணிக்கை | 07 |
| | மாணவர் எண்ணிக்கை | 39 |
| சிறையில் அடைத்தமை | | 21 |
| கடத்தல் சம்பவம் | | 01 |
| கொலையாளிகளால் தாக்குதல் | நிகழ்வுகள் | 05 |
| | மாணவர் எண்ணிக்கை | 08 |
| கொலை மிரட்டல் | நிகழ்வுகள் | 35 |
| | மாணவர் எண்ணிக்கை | 24 |
| மாணவர் சங்க நீக்கம் செய்தல் | மாணவர் சங்க எண்ணிக்கை | 08 |
| | மாணவர் எண்ணிக்கை | 01 |



Police baton charged a group of university students who were protesting in front of the University Grants Commission in Ward Place a short while ago. Our reporter at the scene said that atleast four students sustained injuries during the clash.

Students of the Peradeniya, Ruhunu and Jayawardena Universities are protesting seeking several demands.

2010.05.04
Daily Mirror

padippakam

## வகுப்புத்தடை மற்றும் மாணவர் அந்தஸ்து இரத்துச் செய்யப்படல்

01. **சம்பவம்** இரு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை சமாதானப்படுத்துவதற்குச் சென்ற அப்போதைய கலைப் பீடத்தின் மாணவர்சங்கத்தின் தலைவர் சகோதரருடன் விரிவுரையாளர் சாந்த ஹென்னாயகவும் நிர்வாகம் இச்சம்பவத்தை வீடியோ படமெடுத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து விளக்க முயற்சித்தமை.

**குற்றச்சாட்டு** இந்த விரிவிரையாளரை தாக்கியமை.(ஆனால் எந்தத் தாக்குதலும்இடம்பெறவில்லை)

**தண்டனை** 5 வருடத்திற்கு மாணவர் தன்மையை இரத்துச் செய்தமை

02. **சம்பவம்** 4 வருட பாடத்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட சமசுகாதார பாடத்திட்டத்தை 3 வருடங்களாக குறைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்புக் காட்டிபல்கலைக் கழக முன்றலில் சத்தியாககிரகத்தில் ஈடுபட்டமை மற்றும் பல்கலைக் கழகம் முழுவதும் கறுப்புக் கொடி ஏற்றியமை.

**குற்றச்சாட்டு** கறுப்புக் கொடி ஏற்றி பல்கலைக் கழகத்தை அசுத்தப்படுத்தியமை

தண்டிக்கப்பட்ட மாணவர்கள்
திமுது குணசேகர (பிரதான மாணவர் சங்க தலைவர்)
பசன் ஹேவாவிதாரண

03. **திகதி** 2013 ஏப்ரல் 30

**சம்பவம்** கல்வியை விற்பதற்கு எதிராகவும், பல்கலைக் கழகத்தின் பிரச்சினைகள் சம்பந்தமா பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் ஜயதிலக மண்டபத்தில் விடுதி கூட்டத்தை நடத்தியமை.

**குற்றச்சாட்டு** பகிடிவதை செய்தல்

**தண்டனை** இரு வாரங்கள் வகுப்புத்தடை

**அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

எம்.எல்.எம். புத்திக
ஈ.எஸ்.பி. பிரியங்கர
ஜே.கே.எச். சம்பத்
ஏ.வி.யு. இமன்த
எச்.ஏ.பீ. எம். சந்தருவன்
டப்.ஜீ.கே.எச். கமகே
எச்.ஏ.பீ.எம். ஜயசேகர
எஸ்.கே. சதுரங்க

04. **சம்பவம்** கல்வி தனியாமர்மயம் குறித்து இரண்டாம் ஆண்டு மாணவர்களை அறிவுறுத்துவதற்காக விடுதிக் கூட்டத்தை நடத்தியமை.

**குற்றச்சாட்டு** பகிடிவதை செய்தல் (இது பொய் குற்றச்சாட்டு என்பதுடன், இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்காகவே கூட்டம் நடத்தப்பட்டது. )

**அடக்குமுறைக்கு உள்ளாக்கபட்ட மாணவர்கள்**

யு.பீ. சேனாதீர
டீ.எம்.டீ.வி. திசாநாயக
பி.சி.எல். பத்திரன
டப்.பி.ஜீ.ஏ.ஏ. மதுஷங்க
எஸ்.பி.எல். மதுரங்க
டி.டீ.பீ. அலுத்பிட்டிய
ஏ.எம்.டீ.பீ. அபேசிங்க
எம்.டப்.ஏ.டி.பி. சந்தருவன்
எம்.டப்.ஏ.ஜ. சந்திமால்



படிப்பகம்

padippakam

05. **சம்பவம்** இரண்டாம் ஆண்டு மாணவர்கள் பீட சிற்றுண்டிச்சாலையில் சமசுகாதார பாடத்திட்டத்தில் வெட்டு விழுவது குறித்து கூட்டம் நடடத்தியமை.

**குற்றச்சாட்டு** பகிடிவதை செய்தல்

**தண்டனை** இருவார வகுப்புத்தடை

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**
இசுரு சம்பத்
குஞ்சன ஜயப்பிரகாஷ்

06. **சம்பவம்** விடுதி கூட்டமொன்றை நடத்தியமை

**குற்றச்சாட்டு** பகிடிவதை செய்தமை

**தண்டனை** இருவார வகுப்புத் தடை

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

| | |
|---|---|
| பெரேரா | குரே |
| ரத்னாயக | குணசிங்க |
| ஹேரத் | விஜேசிறி |

## வழக்குத் தொடுத்தல் மற்றும் சிறையிலடைத்தல்

01. **சம்பவம்** பல்கலைக் கழக மாணவர்களின் ஆயிரக்கணக்கான கோரிக்கைள் இருக்கையில் அது குறித்து எவ்வித கவனமும் எடுக்காமல் முகாமைத்துவ பாடத்திட்டம் சார்ந்து கட்டப்பட வேண்டிய கட்டிடத்தை பல வருடங்களாக கட்டாமல் இழுத்தடிக்கின்றமை. (இதனால், மண்டபங்கள் பற்றாக்குறை காரணமாக விரிவுரைகள் நடைபெறுவதில்லை.) 4வருட பாடத்திட்டமான சம சுகாதார பாடத்திட்டம் மூன்று வருடங்களாக குறைத்தமை. பல்கலைக் கழகத்தின் பழைய கட்டிடத்திற்க வெள்ளையடித்து திறப்பதற்கு வருகை தந்ததன் காரணமாக மாணவர்கள் உயர்கல்வி அமைச்சருக்கு எதிர்ப்பு காட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை.

**தண்டனை** அமைச்சரை நையாண்டி செய்ததாக வழக்குத் தொடுத்து 8 மாணவர்களை இரு சந்தர்ப்பங்களில் தடுப்புக்காவலில் வைத்தமை.

**சிறையில் அடைக்கப்பட்ட மாணவர்கள்**
1வது வழக்கு இலக்கம் ஈ/13239

| | |
|---|---|
| சந்தய பண்டார | இந்திக பத்திரன |
| மாலக பண்டார | தினேஷ் வெல்லவ |

2வது வழக்கு ஈ/13229

| | |
|---|---|
| அத்தரகொட பியதம்ம | வடரக்கொட சுமன |
| யசித் திலங்க | ஜே. குமார |

02. **சம்பவம்** அநீதியான முறையில் கைது செய்யப்பட்ட மற்றும் வகுப்புத் தடை செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்யுமாறு வற்புறுத்தி உயர் கல்வி அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தமை.

**குற்றச்சாட்டு** ஆர்ப்பாட்டத்தின்போது உயர்கல்வி அமைச்சின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை

**தண்டனை** 21 மாணவர்கள் மற்றும் அன்றைய அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் உதுல் பிரேமரத்ன கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை.



படிப்பகம்

03. **குற்றச்சாட்டு** பாரதூரமான பாலியல் கொடுமை செய்தமை. மற்றும் பகிடிவதை செயதமை. (அபடியான சம்பவம் எதுவும் நடக்கவில்லை)

**தண்டனை** குற்றச்சாட்டு 3 மாணவர்கள் 3 மாதத்திற்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டமை மற்றும். மேலும் 26 மாணவர்களுக்கு தலா 2 இலட்ச சரீரப்பிணை விதித்தமை.

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| யொசான் சந்தருவன் | தனுஷ்க திலகசிறி | ஜகத் பந்துல சிறிவர்தன |
| சரித லக்மால் | தனுஷ்க பெரேரா | தமிந்த குமார |
| ருசிர மதுசங்க | மல்ஷ ருவன்த | குணரத்ன |
| விதான பத்திரன | புத்திக பிரியசாந்த | ஹன்சிமா |
| ஜயரத்ன | திலீப சுதர்ஷன | சுாந்தனி |
| பிரியங்கர | நீலங்க | W.K. தீபா |
| ஹேமால் ஜயந்த பண்டார | கிறிசான் சஜித் மேனக | அபேரத்ன |
| திலகரத்ன | பிரதீப் குமார | |
| சமன் பரணவிதான | சம்பத் லஹிரு ராஜபக்ஷ | |

04 **சம்பவம்** கல்வியை விற்பதற்கு எதிராகவும், தன்னிச்சையாகக் கைது செய்யப்பட்ட மூன்று மாணவர் தலைவர்களையும் (யொசான் சந்தருவன், சரித லக்மால், ருசிர மதுசங்க) விடுதலை செய்யுமாறு வற்புறுத்தி கண்டி கடிகாரத் தூபியின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியமை.

**குற்றச்சாட்டு** சட்ட விரோதமாக ஆர்ப்பாட்டம் செய்து பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தமை.

**தண்டனை** நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தமை.

**குற்றச்சாட்டுக்கு உள்ளான மாணவர்கள்**

| | |
|---|---|
| மஹேஷ் பிரபாஷ்வர லங்கா | திமுது குணசேகர |
| புத்திக தர்மரத்ன | மஞ்சுல மங்கள குமார |
| ராஜித கித்துல்தெனிய | சஞ்சீவ கசுன் |
| தனுஷ்க போதி | |

## மாணவர் சங்கங்களை தடை செய்தல்

01. **சம்பவம்** கல்வியை விற்பதை சட்டபூர்வமாக்குவதற்கு கொண்டுவரப்பட்ட தனியாமர் பல்கலைக்கழக சட்ட மூலத்திற்கு எதிராக பேராதனை பல்கலைக் கழகத்திலிருந்து கொழும்பு வரை நடைபயணத்தை ஏற்பாடு செய்தமை.

**குற்றச்சாட்டு** பல்கலைக் கழக நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியமை.

**தண்டனை** பிரதான மாணவர் சங்கம் உள்ளிட்ட அனைத்து மாணவர் சங்கங்களையும் தடை செய்தமை.

## கடத்தல் மற்றும் அச்சுறுத்தல

01. **சம்பவம்** பிரதான மாணவர் சங்த்தின் தலைவர் சகோதரர் ஜனக திலங்க மதுஷான் தனது தந்தையை சநதிப்பதற்காக கண்டி பஸ் தரிப்பிடத்திற்கு வந்தபோது வலுக்கட்டாயமாக கடத்திச் சென்று மாணவர் சங்கத்தின் நடவடிக்கைகளிலிருந்து விலகுமாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை.

02. **சம்பவம்** கீழே பெயர் குறிப்பிட்ட மாணவர்களின் வீடுகளுக்குச் சென்ற அரச பாதுகாப்புப் பிரிவுகளைச் சேர்ந்த நபர்களினால் மாணவர்கள் மாணவர் நடவடிக்கைகளிலிருந்து விலகுமாறு அச்சுறுத்தப்பட்டமை.

**இந்த அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்த மாணவர்கள்**

தரிந்து ஹசந்த(பிரதான மாணவர் சங்க உப தலைவர்)
மஹேஸ் பிரபாஷ்வர லங்கா(பிரதான மாணவர் சங்க தலைவர்)

# ரஜரட்டை பல்கலைக்கழகம்

| விளக்கம் | | எண்ணிக்கை |
|---|---|---|
| வகுப்புத்தடை செய்தல் மற்றும் மாணவர் அந்தஸ்தை ரத்து செய்தல் | | 71 |
| வழக்கு தொடர்தல் | வழக்கு எண்ணிக்கை | 04 |
| | மாணவர் எண்ணிக்கை | 41 |
| சிறையில் அடைத்தமை | | 13 |
| கடத்தல் சம்பவம் | | 01 |
| கொலையாளிகளால் தாக்குதல் | நிகழ்வுகள் | 06 |
| | மாணவர் எண்ணிக்கை | 16 |
| கொலை மிரட்டல் | நிகழ்வுகள் | 05 |
| | மாணவர் எண்ணிக்கை | 12 |
| மாணவர் சங்க நீக்கம் செய்தல் | மாணவர் சங்க எண்ணிக்கை | 01 |
| | மாணவர் எண்ணிக்கை | 01 |



**The police riot squad aimed its high powered water cannons on a protest campaign that had been organized by the students of the Faculty of Medicine at Rajarata University.**

**2011.02.24**
**lankaviews.com**

padippakam

# வகுப்புத் தடை மற்றும் மாணவர் தன்மையை இரத்துச் செய்தல்

01. **திகதி** 2010 செப்படம்பர் 23

**சம்பவம்** சிஹின ஹொரு அரன் மேடை நாடகத்தை மேடையேற்றவிடாமல் கொழும்பிலிருந்து வந்த நாடகக் கலைஞர்களையும். ரசிகர்களையும் பல்கலைக் கழக நிர்வாகத்தின் தலையீட்டுடன் பொலிஸாரைக் கொண்டு திருப்பி அனுப்பியதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தமை.

**தண்டனை** 4 வருடத்திற்கு மாணவர் தன்மையை இரத்துச் செய்தல்.

**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

மேன்முறையீடு செய்தமை

மனித உரிமை ஆணையத்திடம் முறைப்பாடு செய்தமை.

மனித உரிமை வழக்கு தொடுத்தமை. (வழக்கு தொடுக்கப்பட்டதன் பின்னர் 4 வருட மாணவர் தன்மை தளை 3 வருடங்களாக குறைக்கப்பட்டது. பின்னர், வழக்கில் மாணவர்கள் நிரபராதிகள் என்பது நிரூபிக்கப்பட்டது. ஆனால், வழக்கு முடியும்போது 3 வருடங்கள் கடந்திருந்தன).

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

R.M.C.S. ராஜபக்ஸ
பஹன் புத்திக
K.D.M.K. திலகரத்ன
லசித் மல்லஆராச்சி
சமந்த வீரசிங்க

02. **திகதி** 2010 அக்டோபர் 17

**சம்பவம்** மாணவர் தலைவர்கள் சிறைபடுத்தப்பட்டமை தொடர்பில் நடைபெற்ற வகுப்பு பகிஷ்கரிப்பு மற்றும் பரீட்சைகள் பகிஷ்கரிப்பு நடவடிக்கையின்போது, நிர்வாகத்தினால் சில மாணவர்களை பயன்படுத்தி வலுக்கட்டாயமாக பரீட்சை எழுத நடவடிக்கை எடுத்தமைக்கு எதிராக செயற்பட்டமை.

**குற்றச்சாட்டு** விரிவுரை மண்டபத்தை தாக்கியமை.

**தண்டனை** 5 வார வகுப்புத்தடை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

ஜி.பி.டி.என்.சந்ரசிறி
சதுரங்க நவரத்ன
துஸார நுவன்
அனுருத்த சமன் பண்டார
அசோக நிர்மல
என்.ஏ.பி.நவரத்ன
திலங்க தர்சன ஹெற்றிஹேவா
நுவன் லசந்த
டனுஸ்க மாலிங்க ஜயமஹ
கிரிஸாந்தி கங்கானி
சுனேத்ரா குமாரி



படிப்பகம்

03. **திகதி** 2011 நவம்பர் 05

**சம்பவம்** அப்படியான ஒரு சம்பவம் நடக்கவில்லை.

**குற்றச்சாட்டு** ஹெல்லராவ மாணவரை தாக்கியமை. (அவ்வாறான தாக்குதல் நடைபெறாததுடன் அவர் பொய் முறைப்பாடு செய்துள்ளார். அவர் அரசாங்கத்துடன் தொடர்புடைய மாணவர் சங்கத்தின் உறுப்பினராகும்)

**தண்டனை** 5 வார வகுப்புத் தடை மற்றும் வழக்கு தொடுத்தமை.

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

| | |
|---|---|
| பீ.ஏ.எஸ்.ஸ்வர்ணதிலக | யு.எம்.வீரசிங்க |
| லசந்த திசானாயக | தினேஸ் புஸ்பகுமார |
| யு.திலகரத்ன | உபுல் திலகரத்ன |

04. **திகதி** 2013 ஜுன் 20

**சம்பவம்** கிராமமும் - பல்கலைக் கழகமும் 2013 வேலைத்திட்டத்தில் பங்குபற்றாமை.
(இந்த வேலைத்திட்டம் பல்கலைக் கழக ஒதுக்கீட்டு ஆணைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டு ரஜரட்டை பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டது. தேசிய மாணவர் வீர தினமும் அன்றைய தினமாக இருந்தமையால் அனைத்து பல்கலைக் கழகங்களின் மாணவர்களு 1985லிருந்து இன்று வரை அந்த தினத்தை நினைவு கூருகின்றனர். அதன் தேசிய நிகழ்வு களனி பல்கலைக் கழகத்தில் அன்று நடைபெற்றதுடன், அன்றை தினத்தில் வேலைத்திட்டத்தில் பங்கேற்க முடியாதெனவும், வேறு ஒரு தினத்தில் நடத்துவதாயிருப்பின் அதற்கு ஆகக் கூடிய ஒத்துழைப்பு தரமுடியுமெனவும் நிர்வாகத்திற்கு மாணவர்கள் அறிவித்திருந்தனர். அதில் பங்கேற்பதற்கு எந்தவொரு மாணவருக்கோ, மாணவர் சங்கத்திற்கோ அனுமதி மறுக்கப்பட்டமாட்டாதெனவும் கூறப்பட்டது. என்றாலும், ஆகக் குறைந்தளவு மாணவர்களே அந்த நிகழ்வில் கலந்துக் கொண்டிருந்தனர். மாணவர்கள் கலந்துக் கொள்ளாமை குழப்பத்திற்கு காரணமாக இருந்ததென குறிப்பிடப்பட்டபோதிலும் அது பொய்யாகும். உண்மையிலேயே இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்ற தேவை நிர்வாகத்திடம் இருக்கவில்லை. முாறாக, அன்றைய தினத்தில் இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்த எடுக்கப்பட்ட முடிவானது, மாணவர் வீர தினத்தை குழப்பியடித்து மாணவர்களை அடக்குமுறை செய்வதற்கான காரணத்தை தேடிக்கொள்வதற்காகவேயாகும்).

**குற்றச்சாட்டு** நிகழ்விற்கு மாணவர்களின் பங்கேற்றலை தடுத்தமை.
பீடாதிபதிகளை தடுமாற வைத்தமை, நிகழ்வை குழப்பியடித்தமை ஊடாக பல்கலைக் கழகத்தை அவமானப்படுத்தியமை

**தண்டனை** மாணவர் தலைவர்கள் 8 பேரின் மாணவர்அந்தஸ்தினை 6 மாதத்திற்கு தடை செய்தல்.

**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

01. இந்த நிகழ்வில் கலந்துக் கொள்ளாத அனைத்து மாணவர்களும் சுய விருப்பத்தோடு கலந்துக் கொள்ளவில்லையென தமது ஒப்பத்துடன் மஹஜரொன்றை பெற்றுக் கொடுத்தமை.
02. மனித உரிமை ஆணையத்திற்கு முறைப்பாடு செய்தமை.
03. குற்றமற்றவர்கள் என்பதை குறிப்பிட்டு மேன்முறையீடு செய்தமை

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| அனுராத இசுரு பண்டார | அசேல சந்தருவன் | தினேஸ் புஸ்பகுமார |
| சம்பத் பண்டார | தினேஸ் குமார | சுரேஸ் மிஹிர பண்டார |
| புத்திக செனவிரத்ன | கிஹான் அமில | |

05. **திகதி** 2013 ஆகஸ்ட் 27 -29

**சம்பவம்** மாணவர் தலைவர்களுக்கு விதிக்கப்பட்ட வகுப்புத்தடைக்கும், முகாமைத்துவ பட்டத்தை விற்பதற்கும் எதிராக 2 ஆர்ப்பாட்டங்கள் செய்தமை.

**குற்றச்சாட்டு** பல்கலைக்கழக வளாகத்தில் சட்டவிரோதமான ஆர்ப்பாட்டம் மற்றும் கூட்டத்தை ஏற்பாடு செய்தமை.

**தண்டனை**

| மாணவர் அந்தஸ்தை ரத்து செய்தல்(காலம்) | 3 வருடம் | 2 வருடம் |
|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 4 | 9 |

**எடுக்கப்பட்ட** நடவடிக்கைகள் மேன் முறையீடு செய்தமை

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

லஹிரு வீரசேகர
பீ.எம்.பீ.பீ.குமார
டிரோன் சமரவீர
ஏ.ஏ.எம்.ப்ரணாந்து
விகசித பதிரண
சாமர சம்பத்
அகனலு திசாநாயக
சீ.பீ.ஏ.ரணவீர
டி.டி.அம்பலவிட
சானக அன்
சந்தக அதுரபான
சீ.எஸ்.தர்மதாச
திலக் கித்சிரி சொய்சா

06. **திகதி** 2013 செப்டம்பர் 19

**சம்பவம்** முகாமைத்துவ பட்டத்தை விற்பதற்கு எதிராக துண்டுப் பிரசுரம் விநியோகித்தமை. ( துண்டுப்பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்த இடத்திற்கு வந்த பல்கலைக் கழக ஒழுக்கக் கட்டுப்பாட்டாளர் மாணவர்களை தாக்குவதற்கு முயன்றதுடன், மாணவர்களின் கைத்தொலைபேசிகளை பறித்து தனிப்பட்ட தகவல்களைக் கூட பரீட்சித்ததோடு, மாணவர்கள் அதற்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்தமை.

**தண்டனை**

| மாணவர் அந்தஸ்தை ரத்து செய்தல்(காலம்) | 1 வருடம் | 5 வருடம் |
|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 1 | 5 |

## வழக்கு தொடுத்தல்இ சிறையிலடைத்தல மற்றும் தாக்குதல் நடத்தியமை

01. **திகதி** 2010 அக்டோபர் 17

**சம்பவம்** மாணவர் தலைவர்களை சிறையிலடைத்த காரணத்திற்காக நடைபெற்ற வகுப்பு பகிஸ்கரிப்பின்போது அதற்கு எதிராக நிர்வாகத்தினர் மாணவர் சிலரினை வைத்து பரீட்சையை நடத்தியமை.

**தண்டனை** மாணவ மாணவியர் 21 பேருக்கு 5 வருடத்தின் பின்னரான சிறைத்தண்டனை.

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

துசார நுவன்
அசோக நிர்மல்
என்.ஏ.பீ.நவரத்ன
நுவன் லசந்த
சுனேத்ரா குமாரி
அனுருத்த சமன் பண்டார
தினேஸ் புஸ்பகுமார
திலங்க தர்ஷன ஹெட்டிஹேவா
கிருஷாந்தி கங்கானி

padippakam

02. **திகதி** 2010 அக்டோபர் 14

**சம்பவம்** மாணவர்கள் சிலரை உண்மைக்கு முரணாக சிறையிலடைத்தமைக்கு எதிராக கொழும்பில் போராட்டம் நடத்தியமை.

**குற்றச்சாட்டு** பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தமை, அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை.

**அடக்குமுறை செய்யப்பட்ட விதம்**

01. 10 மாணவர்கள் 28 நாட்களுக்கு சிறையிலடைக்கப்பட்டமை (வழக்கு இன்னும் தொடர்கிறது)
02. நடத்தப்பட்ட மாணவர் ஆர்ப்பாட்டத்தில் போலிசாரினால் மிகவும் கடுமையான அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டமை (அதில் மாணவ மாணவியர் பலர் பலத்த காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்)

**எடுக்கப்பட்ட** நடவடிக்கைகள் மேன்முறையீடு செய்தமை

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| ஆர்.எம்.சி. ராஜபக் | நிவந்தக சஞ்ஜீவ | திலின சந்தருவன் |
| நிஹால் திலகரத்ன | துசித சுமணதாச | ஜானக உபுல் குமார |
| உதார ப்ரதீப் விஜேவீர | சிந்தக நாணயக்கார | விஜேசிங்க |
| அமில சந்தருவன் | இந்திக சமிர | |

## தாக்குதல்

01. **திகதி** 2012 டிசம்பர் 08

சம்பவம் பல்கலைக்கழகத்தினுள் விசேட நிகழ்வொன்றினை முடித்துக்கொண்டு விடுதிகளுக்கு செல்லும்போது பல்கலைக்கழகத்திற்கு முன்னால் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலின்போது பல மாணவர்கள் சிறிய காயங்களுக்கு உள்ளானதுடன் மாணவரொருவர் பலத்த காயங்களுக்கு ஆளானார்.

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்**

உபுல் திலகரத்ன

02. **திகதி** 2012 டிசம்பர் 09

**சம்பவம்** பல்கலைக்கழக பூமிக்கு வெளியே வாடகையாகப்பெற்ற தென்னகோன் விடுதிக்குள் இரவு 12 மணியளவில் அத்துமீறி தடிகள் ஆயுதங்களுடன் நுளைந்த கொலைக்கும்பல் மாணவர்கள்மீது மிகவும் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலின்போது பல எண்ணிக்கையான மாணவர்கள் காயங்களுக்கு உள்ளானதுடன் இரு மாணவர்கள் பலத்த காயங்களுக்கு ஆளாயினர்.

**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

பொலீசில் முறைப்பாடு செய்யப்பட்டது (இன்றுவரை நெ்தவொரு விசாரணைகளோ எந்தவொரு கைதுகளோ நிகழவில்லை)

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

வசந்த அஜித்
யு.ஆர்.பி.கே.திலகரத்ன
ஏ.ஜி.திசாநாயக



படிப்பகம்

03. **திகதி** 2013 அக்டோபர் 11

**சம்பவம்** பல்கலைக்கழகத்தினுள் விசேட நிகழ்வொன்றினை முடித்துக்கொண்டு விடுதிகளுக்கு சென்ற மாணவர் சிலர் மீது இனம்தெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டது.

**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**
பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. (எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை)

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**
மகேஸ் விஜேந்த்ர டபிள்யு.ஏ.விஜேகோன் நலின் திசாநாயக
தமித் வத்தேகெதர எச்.எம்.எஸ்.எம்.ஹேரத்

## பெற்றோரை அச்சுறுத்தல்

01. **திகதி** 2013 டிசம்பர் 18

**சம்பவம்** ஒழுக்கத்திற்கு முரணான வேலைகளில் ஈடுபட்டதற்கென குற்றச்சாட்டு சுமத்துவதற்கு பெற்றோர்களை அழைத்து அச்சுறுத்தப்பட்டது. இங்கு மாணவன் மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் பெற்றோரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

| | |
|---|---|
| என்.டி.தர்மதாச | கே.நிஹதமான்ய |
| துமிந்த ப்ரியதாஸ் | எம்.ஆர்.எதிரிசிங்க |
| கே.எஸ்.கருணாதாஸ் | என்.எஸ்.திசாநாயக |
| நிபுண உதார | தில்ஷான் ப்ரணாந்து |
| ஜி.ஐ.திலகரத்ன | டபிள்யு.ஏ.விஜேகோன் |
| கயான் சிந்தக | நலிந்த திஸாநாயக |
| எம்.எம்.திலகரத்ன | பீ.என்.பண்டார |
| எல்.எல்.சில்வா | எம்.பி.மென்டிஸ் |
| எஸ்.டி.தந்தார | ருவிர ஜயசூரிய |
| ஐ.டி.சேனாரத்ன | கசுன் விமுக்திக |
| டபிள்யு.எஸ்.ரசிந்து | தசுன் பியுமால் |
| எஸ்.வை.ஆனந்த | எஸ்.எம்.ஹேரத் |
| மயுர ப்ரசன்ன | தர்ஷன குலரத்ன |
| எஸ்.ஏ.பெரேரா | எஸ்.டி.ஹேரத் |
| யு.எஸ்.டி.இசான் | என்.வி.ஹேவகே |

# களனி பல்கலைக்கழகம்

| விளக்கம் | | எண்ணிக்கை |
|---|---|---|
| வகுப்புத்தடை செய்தல் மற்றும் மாணவர் அந்தஸ்தை ரத்து செய்தல் | | 87 |
| வழக்கு தொடர்தல் | வழக்கு எண்ணிக்கை | 07 |
| | மாணவர் எண்ணிக்கை | 48 |
| கொலை | | 01 |
| சிறையில் அடைத்தமை | | 05 |
| கடத்தல் சம்பவம் | | - |
| கொலையாளிகளால் தாக்குதல் | நிகழ்வுகள் | 34 |
| | மாணவர் எண்ணிக்கை | 47 |
| கொலை மிரட்டல் | நிகழ்வுகள் | 25 |
| | மாணவர் எண்ணிக்கை | 76 |
| மாணவர் சங்க நீக்கம் செய்தல் | மாணவர் சங்க எண்ணிக்கை | - |
| | மாணவர் எண்ணிக்கை | - |



padippakam

## வகுப்புத் தடை மற்றும் மாணவர் அந்தஸ்தை ரத்துச் செய்தமை

01. **திகதி** 2010 ஜூலை 12

**சம்பவம்** கல்வி தனியார்மயம் குறித்து மற்றும் கல்வி நலனோம்புகை பிரச்சிணைகள் குறித்தும் பேசுவதற்காக கன்னங்கர விடுதிக்குள் கூட்டம் நடத்தியமை

**குற்றச்சாட்டு** சட்ட விரோதமாக கூட்டம் நடத்தியமை

**தண்டனை** பட்டம் வழங்கும் விழாவை தடை செய்தமை.

**அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள்**

தயான் வீரக்கொடி(2010 பிரதான மாணவர் சங்க தலைவர்)
மேனகா சமன்மலீ
லக்மாலி ஹேரத

02. **திகதி** 2010 ஆகஸ்ட்

**சம்பவம்** தன்னிச்சையாக நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு விடுதி மறுக்கப்பட்டு விடுதிகள் மாற்றப்படுவதற்கு எதிராக இருந்தமை. ( இதுவரை பல்கலைக் கழகத்திற்குள் நிலவிய 600 மாணவமர்களுக்கு மாத்திரமே இடவசதியுள்ள விடுதிகளில் ஆண் மாணவர்களை, பல்கலைக் கழகத்திற்கு வெளியில் அமைந்துள்ள 1500 மாணவர்களுக்கு மாத்திரம் இடவசதியுள்ள கன்னங்கர விடுதியில் மாணவிகளும் தங்கியிருந்தனர். நிர்வாகத்தினால் அவசரமாக இந்த விடுதியை மாற்றுவதற்கு , அதாவது, சுமார் 600 மாணவர்களை 1500 பேர் தங்கக் கூடிய கன்னங்கர விடுதிக்க அனுப்பவும், அங்குள்ள 1500 மாணவிகளை 600 பேர் மட்டுமே தங்கக் கூடிய உள்ளக விடுதிக்க கொண்டுவரவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் நோக்கமானது, ஆண் மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குள் தங்கியிருப்பது மாணவர் அரசியலுக்கு வசதியானதாக கருதியதும் மற்றும் பல்கலைக் கழகத்திற்கு வெளியில் கொண்டு சென்றால், ஆர்ப்பாட்டங்களும் மாணவர் போராட்டங்களும் நின்றுவிடும் என்ற எண்ணத்திலாகும். ஆனால், 900 மாணவிகளுக்கு இதனால் விடுதி கிடைக்கவில்லை. ஆதனால், அதற்கு எதிர்ப்பு தெரிவித்த மாணவர்கள் இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாதிருப்பதற்கும், விடுதிக்குள் தங்கியிருப்பதற்கும் தீர்மானித்தனர்.

